# 24

# தெளிவற்ற வேதவசனமும் "தெளிவான" சத்தியங்களும்

## [ரோமர் 5:18-21 மற்றும் 5:12-21ன் முடிவுரை பற்றிய படிப்பு]

இது, "வேதாகமம் முழுவதிலும் மிகவும் கடினமான வேதவசனப்பகுதி" என்று அழைக்கப்படும் வசனங்களின்மீதான நமது மூன்றாவது பாடமாகும்:[1] ரோமர் 5:12-21. இவ்வசனப்பகுதியில் பவுல், ஆதாமையும் கிறிஸ்துவையும் ஒப்பிட்டு நேர்மாறாக ஒப்பீடு செய்தார். ஆதாமும் கிறிஸ்துவும் அறிமுகப்படுத்தப்படுதல் (வசனங்கள் 12-14) மற்றும் அவர்கள் நேர்மாறாக ஒப்பிடப்படுதல் (வசனங்கள் 15-17) ஆகியவற்றை நாம் முன்னதாகக் கண்டிருக்கிறோம். இந்தப்பாடத்தில் நாம், அவர்கள் ஒப்பிடப்படுதலைக் காண்போம் (வசனங்கள் 18-21).

இதுபோன்ற வசனப்பகுதிகளைக் கையாளுவதில் உள்ள ஒரு அபாயம் என்னவென்றால், வசனப்பகுதியின் தெளிவற்ற அம்சங்களை நாம் இறுகப் பற்றிக்கொள்ளும்போது, நாம் கற்றுக்கொள்ளும்படி தேவன் நோக்கங்கொண்டுள்ள தெளிவான சத்தியங்கள் பற்றிய கண்ணோக்கைத் தவறவிடுதல் என்பதே ஆகும். ரோமருக்கு எழுதிய நிருபத்தின் இப்பகுதி பற்றிய நமது படிப்பை நாம் முடிக்குமுன்னர், இவ்வசனப்பகுதியில் இருந்து வெளிவருகிற, ஏறக்குறைய தெளிவான சில சத்தியங்களை மறு கண்ணோட்டமிட நான் விரும்புகிறேன்.

### தெளிவற்ற வேதவசனம் (5:18-21)

நமது வேத வசனப்பகுதியின் முந்திய பாகத்தில் (வசனங்கள் 15-17), ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் *நேரெதிர் ஒப்பீடு* என்பது வலியுறுத்தம் பெற்றிருந்தது: "தேவனுடைய கிருபைவரம் மீறுதலுக்கு ஒப்பானதல்ல" என்று பவுல் கூறினார் (வசனம் 15). இந்தப்பகுதியில் (வசனங்கள் 18-21) ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோருக்கிடையில் *ஒப்பீடுமீது* கவனக்குவிப்பு உள்ளது. ஒப்பீட்டின் சொற்றொடராக்கத்தைக் கவனியுங்கள்: "உண்டானதுபோல ..." (வசனம் 18); "... ஆக்கப்பட்டது போல ..." (வசனம் 19); "... கொண்டதுபோல ..." (வசனம் 21).

பவுலின் நேர்மாறான ஒப்பீடுகளும், ஒப்பீடுகளும் ஒன்றின்மீதொன்று கவிகின்றன - இது அடிக்கடி இவ்விரண்டிற்கும் இடையில் மிகச்சிறிய வித்தியாசத்துடன் உள்ளது. இருந்தபோதிலும், இவ்வசனப்பகுதியின் முடிவு வசனங்களில், ஆதாமும் கிறிஸ்துவும் எவ்வாறு ஒன்றுபோலிருந்தனர் - அல்லது, மிகக்குறிப்பாகக்

*கூறுவதென்றால், அவர்களின் செயல்கள் எவ்வாறு ஒன்றுபோலிருந்தன - என்பதை அப்போஸ்தலர் வலியுறுத்தினார்.*

**இரண்டு செயல்களுமே உலகளாவிய பின்விளைவுகளைக் கொண்டிருந்தன (வசனம் 18)**

*முன்பே குறிப்பிட்டதுபோல, பவுல் 12ம் வசனத்தில் தொடங்கிய வாக்கியத்தை முடிக்காதிருந்தார்: "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று -" நான் ஒரு வாக்கியத்தை முடிக்காமல் அடுத்த சிந்தனைக்குக் கடந்து செல்லும்போது, எனது தொடக்கச் சிந்தனையின் தடத்தை நான் அடிக்கடி இழந்துபோவதுண்டு, ஆனால் பவுல் அவ்வாறு இழக்காதிருந்தார். 18ம் வசனத்தில், அவர் 12ம் வசனத்தின் சிந்தனையைத் திரும்பத் தொடர்ந்தார்: "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே[2] எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." "ஒரே மீறுதல்" என்பது தோட்டத்தில் ஆதாம் செய்ததாக இருந்தது, "ஒரே நீதி" என்பது சிலுவையில் இயேசுவின் மரணமாக இருந்தது.*

*ரோமர் 5:12-21 எதைப் போதிப்பதில்லை என்பதைப்பற்றி ("ஒரே மனுஷனாலே" என்ற பாடத்தில்) நாம் கலந்துரையாடுகையில், சிலர் 18ம் வசனத்தை "உலகளாவியதன்மை" - எல்லா மக்களும் கடைசியில் இரட்சிக்கப்படுவார்கள் என்ற கருத்து - பற்றிப் போதிக்கப் பயன்படுத்த முயற்சிசெய்கின்றனர் என்று குறிப்பிட்டோம். அந்த நிலைப்பாடு வேதாகமத்தின் வேறிடத்தில் உள்ள தெளிவான போதனைக்கு நேர்மாறாகிறது (மத்தேயு 7:13, 14; 25:41, 46; ரோமர் 2:5-9). இவ்வசனப்பகுதி உலகளாவிய தன்மையைப் போதிப்பதில்லை என்றால், இது எதைப் போதிக்கிறது?*

*ஆதாமின் பாவம், எல்லா மக்களையும் சோதனைகளும் பாவம்செய்யத் தூண்டுதல்களும் நிறைந்த உலகத்தில் வாழும்படி "ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து" கடைசியில் உடல்ரீதியான மரணத்தை அனுபவிக்கும்படி செய்தது என்பதே இவ்வசனப்பகுதி முழுவதிலும் உள்ள முதன்மை வலியுறுத்தமாகும். இந்த மரணதண்டனையானது இயேசுவின் "ஒரே செயலினால்" திருப்பிப் போடப்பட்டது. இப்போது கர்த்தருடைய உதவியுடன், நாம் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின்மீது வெற்றிகொள்ள முடியும் (ரோமர் 8:11, 13, 35-39).*

*"ஆக்கினைத்தீர்ப்பு" மற்றும் "நீதிமானாக்கப்படுதல்" ஆகியவற்றின் அர்த்தத்தை நீங்கள் ஆவிக்குரிய வட்டாரத்துடன் சுருக்கிக்கொள்வதைத் தேர்ந்துகொள்கிறீர்களா? விஷயம் அதுவாக இருந்தால், 18ம் வசனம் ஒரு நிபந்தனைக் கூற்றாகக் கண்ணோக்கப்படலாம் - இது கூறப்படாத ஆனால் புரிந்துகொள்ளக்கூடிய நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. இது 18ம் வசனத்தைப் பின்வருமாறு வாசிக்கப்படும்படிக்கு செய்யும்: "ஆகையால் ஒரே மீறுதலினாலே [பாவம் செய்த] எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே [விசுவாசிக்கிற] எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று."[3]*

*18ம் வசனத்தை ஒருவர் எவ்வாறு விளக்கியுரைத்தாலும் சரி, பின்வரும்*

உண்மை தெளிவாக உள்ளது: ஆதாமின் செயலும் கிறிஸ்துவின் செயலும் ஆகிய இரண்டுமே உலகளாவிய பின்விளைவுகளைக் கொண்டிருந்தன என்ற வகையில் இவையிரண்டும் ஒன்றுபோல் இருந்தன என்பது ஒரு வழியாயிருக்கிறது.

### இரண்டு செயல்களும் கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல் என்ற விருப்பத்தேர்வை உள்ளடக்கியிருந்தன (வசனம் 19)

ஆதாமின் செயலும் கிறிஸ்துவின் செயலும் என்ற இவ்விரு செயல்களும், கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாதிருத்தல் என்ற விருப்பத் தேர்வை உள்ளடக்கியிருந்தன என்ற உண்மையில், இவை இரண்டும் ஒன்றுபோலிருந்தன என்பது, இன்னொரு வழியாயிருக்கிறது. 19ம் வசனம், ''அன்றியும் ஒரே மனுஷனுடைய *கீழ்ப்படியாமையினாலே* அநேகர் [எல்லாரும்] பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் [எல்லாரும்] நீதிமான்களாக்கப்படுவார்கள்.''

ஏதேன் தோட்டத்தில், ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படியவோ அல்லது அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கவோ முடிந்திருந்தது - ஆதாம் கீழ்ப்படியாதிருக்கத் தேர்ந்துகொண்டான். கெத்செமெனே தோட்டத்தில், இயேசு அதே போன்றதொரு தெரிவைக் கொண்டிருந்தார்; ஆனால் செயல்விளைவில் ஆதாம், "எனது சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறியிருந்த இடத்தில் இயேசு, "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறினார் (மத்தேயு 26:42).[4] கிறிஸ்து தமது பிதாவுக்குக் கீழ்ப்படிவதற்கான அவரது மனவிருப்பமானது பின்வருவன போன்ற வசனப்பகுதிகளில் வலியுறுத்தப்படுகிறது:

> அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி (எபிரெயர் 5:8, 9).

> அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:8).

பவுல், 19ம் வசனத்தில், எல்லா மனுஷரும் "பாவிகளாக்கப்பட்டனர்" என்பது, ஆதாமின் கீழ்ப்படியாமையினால் ஏற்பட்ட ஒரு விளைவு என்று குறிப்பிட்டார். ஆதாமின் பாவம் ஒவ்வொருவரையும் பாதித்தது என்பது இதைப் புரிந்துகொள்வதற்கு மிகவும் சுலபமான ஒரு வழியாக உள்ளது. நாம் எல்லாரும் அவனது பாவத்தின் விளைவுகளினால் துன்புறுவதால், அது நாமே பாவம் செய்திருந்தது *போன்றுள்ளது.*

''அதுபோலவே,'' இயேசுவின் கீழ்ப்படிதல் மூலமாக எல்லாரும் ''நீதிமான்களாக்கப்படுவார்கள்.'' மீண்டுமாகத், தண்டனை திருப்பப்படுதலின்மீது வலியுறுத்தம் வைக்கப்படுகிறது. மெக்கார்டு என்பவரின் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், "... even so the gift of acquittal that brings life came upon all men through one righteous act" என்றுள்ளது. J. D. தாமஸ் என்பவர் 19ம் வசனத்தின் மையக்கருத்தைப் பின்வருவது போன்று தொகுத்துரைத்தார்: ''[தங்கள் சொந்தத்தவறில்லாதிருந்தும்]பலர் பாவிகளாக்கப்பட்டனர், அதுபோன்றே ஒருவரின் கீழ்ப்படிதலின் மூலமாக, [தங்களிடத்தில் சொந்த நீதி

*யில்லாதிருந்தும்கூட] பலர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.''*[5]

*19ம் வசனம், எடுத்துரைக்கப்படாத ஆனால் புரிந்துகொள்ளப்படக் கூடிய நிபந்தனைகளுடன் இருத்தலை நீங்கள் விரும்பித் தேர்ந்துகொள்ள லாம்: ''அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் [அவர்களும் கீழ்ப்படியாதபோது] பாவிகளாக்கப்பட்டதுபோல், ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் [அவர்களும் கீழ்ப்படியும்போது] நீதிமான்களாக்கப்படுவார்கள்.''*

***இடையீடு: "ஆனால் நியாயப்பிரமாணம் உதவவில்லையா?" (வசனம் 20)***

*பவுல் தாம் கூறியதற்கு யூத வாசகர்கள் எவ்வாறு பதில்செயல் செய்வார்கள் என்பது பற்றி எப்போதுமே சிந்தைநிறைந்தவராக இருந்தார். இவ்வாறு, அவர் யூதர்களிடத்தில் இருந்து வரச் சாத்தியமாயிருக்கக்கூடிய பின்வரும் கேள்விக்குப் பதில் அளிக்கத் தமது சிந்தனைவரியில் இடையீட்டை ஏற்படுத்தினார்: "ஆனால் நியாயப்பிரமாணத்தைப் பற்றிய விஷயம் என்ன? ஆதாமின் பாவத்தினால் கொண்டுவரப்பட்ட எதிரான நிலைகளைத் திருத்துவதற்கு, அல்லது குறைந்தபட்சம் மேம்படுத்துவதற்கு நியாயப்பிரமாணம் ஒன்றும் செய்யவில் லையா?'' செயல்விளைவில் பவுலின் பதில் மறுபடியும் ஒலிக்கும் "இல்லை!'' என்பதாகவே இருந்தது.*

*அவர், ''மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம்[6] வந்தது'' என்று கூறினார் (வசனம் 20அ). ஒரு யூதர் அந்தக் கூற்றிற்கு எவ்வாறு பதில்செயல் செய்திருப்பார் என்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "இல்லை, இல்லை, மீறுதலையல்ல, ஆனால் நீதியைப் பெருக்குதல் என்பதே நியாயப்பிர மாணத்தின் நோக்கமாகும்'' - மற்றும் அவர் கூறியது சரியானதாகவே இருக்கும். கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், "... அது [நியாயப்பிர மாணம்] அக்கிரமங்களினிமித்தமாக [ஆபிரகாமுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையுடன்] கூட்டப்பட்டு'' என்று எழுதினார் (கலாத்தியர் 3:19). என்னிடத்தில் உள்ள* NASB *வேதாகமத்தின் பிரதியில், "அக்கிரமங்களினிமித்த மாக'' என்பதன்மீதான குறிப்புக்குப் பின்வரும் மேற்கோள் குறிப்புள்ளது:* "for the sake of defining [transgressions]". *மக்கள் பாவத்தை உணர்ந்தறிந்து, அவர்கள் பாவம்* செய்யாதிருக்க *ஊக்குவிக்கப்படும்படிக்கு நியாயப்பிரமாணம் தரப்பட்டது.*

*இருந்தபோதிலும், நியாயப்பிரமாணம் பாவத்தைக்* குறைப்பதற்குப் *பதிலாக அது* பெருகுவதற்குக் *காரணமாயிற்று என்பது, நியாயப்பிரமாணம் தரப் பட்டதின் ஒரு* விளைவாக *உள்ளது. இதற்கான காரணம், நாம் 7ம் அதிகா ரத்திற்குச் செல்லும்போது விளக்கியுரைக்கப்படும்.* AB *வேதாகமம் தனது விரித்துரைக்கப்பட்ட வசனப்பகுதியில் இரண்டு காரணங்களை உள்ளடக்குகிறது: "ஆனால் நியாயப்பிரமாணம், மீறுதலை விரிவாக்கவும் அதிகரிக்கவும் மாத்திரமே வந்தது [இது அக்கிரமத்தை மிகவும் உறுதியானதாகவும் மன எழுச்சிமிக்க எதிர்ப்பாகவும் ஆக்கிற்று].''*

*நியாயப்பிரமாணம் தரப்பட்டது சூழ்நிலையில் நிம்மதியை ஏற்படுத்த வில்லை, ஆனால் அதை மிகவும் மோசமாக்கிற்று என்பதே பவுலின் கருத்தாயிருந்தது. லியோன் மோரீஸ் என்பவர், நியாயப்பிரமாணம் "பாவத்தைத் தடுத்தல் பற்றி அக்கறை கொள்ளவில்லை (அதைச்செய்தல் மிகவும் தாமத*

மாகியிருந்தது). அல்லது அது [நியாயப்பிரமாணம்] இரட்சிப்பைப்பற்றி அக்கறை கொள்ளவுமில்லை [அதைச் செய்யக்கூடாதபடி நியாயப்பிரமாணம் மிகவும் பலவீனமாக இருந்தது]" என்று எழுதினார்.[7] F. F. புரூஸ் என்பவர், மோசேயின் நியாயப்பிரமாணம் "நடைமுறை நோக்கத்திற்காகத் தற்காலிக அளவையாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது, ஆனால் அது மீட்பின் வரலாற்றில் நிரந்தரமான தனிச்சிறப்பு எதையும் கொண்டிருந்ததில்லை" என்று விளக்கியுரைத்தார்.[8]

பாவம் பெருகுவதற்கு நியாயப்பிரமாணம் காரணமாக இருந்தது என்று அறிவித்துவிட்டுப், பவுல் பின்வரும் நினைவுகூரத்தக்க கூற்றை ஏற்படுத்தக் கடந்து சென்றார்: "அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிக மாய்ப் பெருகிற்று" (ரோமர் 5:20ஆ). இந்த உறுதிப்பாட்டில், பவுல் வார்த்தைகளில் விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்தினார். "அதிகமாய்ப் பெருகிற்று" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கவார்த்தையானது, *huper* என்ற முன்னிடைச் சொல்லுடன் உள்ள "அதிகமாய்" என்பதற்கான வார்த்தையாக உள்ளது. இந்த *huper* என்ற முன்னிடைச் சொல்லில் இருந்துதான் நாம் hyper என்ற வார்த்தையைப் பெறுகிறோம். "Super" என்பது லத்தீன் மொழியில் இதற்கான இணைச்சொல் ஆகும். 20ம் வசனத்தின் கடைசிப்பகுதி "பாவம் பெருகின (abounded)[9] இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று (*super*-abounded)" என்று மொழிபெயர்க்கப்படக்கூடும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவனு டைய கிருபையானது, எழக்கூடிய எந்தப் பாவப்பிரச்சனை பற்றியும் அக்கறை எடுத்துக்கொள்ளப் போதுமானதற்கும் *அதிகமானதாகவே* உள்ளது. பிலிப்ஸ் என்பவர் பின்வரும் பொழிப்புரையைக் கொடுத்தார்: "பாவம் பரந்ததாகவும் ஆழமானதாகவும் காண்பிக்கப்பட்டிருப்பினும், தேவனின் கிருபை அதைவிடப் பரந்ததாகவும் ஆழமானதாகவும் இருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி!"

**இரு செயல்களும் ஆளுகைகளை நிலைநாட்டின (வசனம் 21)**

"பாவம்" மற்றும் "கிருபை" ஆகியவற்றிற்கான குறிப்பானது பவுலை அவரது சிந்தனையின் பிரதான வரிக்கு - மற்றும் ஆதாமின் செயலுக்கும் கிறிஸ்துவின் செயலுக்கும் இடையில் உள்ள அவரது மூன்றாம் ஒப்பீட்டிற்கு - திரும்பக் கொண்டுவந்தது. வசனம் 21அ, "ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல" என்று கூறுகிறது. முன்னதாகப், பவுல் மரணம் ஆளுகை செய்வதாகச் சித்தரித்திருந்தார் (வசனங்கள் 14, 17). இப்போது அவர் அந்தச் சித்தரிப்பைச் சற்றே மாற்றி பாவத்தை, கொடூரம் வாய்ந்த ஆட்சியாளனாக அது தனது குடிகளைக் கட்டுப்படுத்த மரணத்தின் அச்சுறுத்தலைப் பயன்படுத்துவதாக சித்தரித்தார், NCV வேதாகமத்தில், "Sin once used death to rule us" ("ஒருகாலத்தில் பாவம் நம்மை ஆளுகைசெய்ய மரணத்தைப் பயன்படுத்திற்று") என்றுள்ளது.

இருப்பினும், பவுல் கிருபையானது பாவத்திற்கு மேலானதாக இருப் பதைத் திரும்பவும் வலியுறுத்தினார்: "கிருபையானது … நீதியினாலே … ஆண்டுகொண்டது" (வசனம் 21ஆ, இ). பாவம் மனிதகுலத்தை ஆளப் பயத்தைப் பயன்படுத்துகிறது, அதேவேளையில் கிருபை அன்பைப் பயன்படுத்துகிறது. "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" (1 யோவான் 4:18). விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய கிருபையை *ஏற்றுக்கொண்டவர்கள்* இருதயங்களில் மாத்திரமே கிருபை ஆளுகிறது என்பது உண்மையே. இவ்வாறு NIrV வேதாகமம்

இவ்வசனத்தின் இப்பகுதியை, "So also grace rules in the lives of those who are right wih God" ("அதுபோன்றே கிருபையும் தேவனுடன் நேராயிருப்பவர்களின் வாழ்வுகளில் ஆளுகை செய்கிறது") என்று மொழிபெயர்த்திருக்கிறது.

பவுல் தமது சிந்தனை வரியை முடிக்கையில், அவர் தேவனுடைய கிருபையின் ஈவினுடைய நிறைவான "அதிகம் ஏராளமான" பகுதிக்குத் திரும்பி னார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (வசனம் 21இ). உண்மை யான "ஜீவன்" என்பது தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதாகவும், "நித்திய ஜீவன்" என்பது நித்தியத்திற்கும் அவரது பிரசன்னத்தில் இருத்தலாகவும் உள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 21:22, 23; 22:3-5ஐக் காணவும்). மீண்டும் ஒருமுறை, பவுல் இது "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக" மாத்திரமே சாத்தியமாகும் என்று வலியுறுத்தினார்!

## "தெளிவான" சத்தியங்கள் (5:12-21)

நாம் ரோமர் 5:12-21ன் ஊடே நமது வழியைக் கடந்து வந்திருக்கிறோம். இது நான் எழுதியிருக்கும் ஒவ்வொரு வார்த்தையைக் கொண்டும் நான் திருப்தி யடைந்தேன் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. இது, நான் இவ்வசனப்பகுதியின் ஒவ்வொரு விவரத்தையும் புரிந்திருக்கிறேன் என்று நான் தைரியமாக இருப்பதாக அர்த்தப்படுகிறதா? இல்லை, இல்லை, இல்லை. மோசஸ் E. லார்டு என்பவர், "பின்பு, வாசகர் [ஆய்வில் உள்ள வசனப்பகுதியை] படித்திருக்கும்போது, நான் கொண்டதுபோன்றே, அவர் தான் நிபுணத்துவம் பெற்றுள்ளது பற்றி உணர்வில் திருப்தியை அடைவார், நான் உரிமைகோர அஞ்சும் உணர்வுநிலையை அவர் உடையவராக இருப்பார்"[10] என்று எழுதியபோது, என்னுடையது போன்ற உணர்வையே வெளிப்படுத்தினார். பலவிவரங்களைப் பற்றி நாம் கேள்விகளைக் கொண்டிருப்பினும், நமது வசனப்பகுதியில் (உரைக்கப்பட்ட அல்லது மறைமுக மாக உணர்த்தப்பட்ட) சத்தியங்கள் உள்ளன, அவற்றை நாம் தவறவிடுவதைத் தேவன் விரும்பமாட்டார். நாம் அந்தப் பலவற்றைக் கண்ணோக்குவோமாக.[11]

### "ஒன்று" முக்கியமானதாக உள்ளது

நீங்கள் "ஒரே ஒருவராக" இருக்கிறீர்கள். எனவே நீங்கள் முக்கிய மற்றவர் என்று நீங்கள் நினைக்கலாம். நமது வசனப்பகுதி முழுவதையும் கண்ணோக்கிப் பார்த்து, "ஒரே" என்ற வார்த்தை எத்தனை முறை தோன்றுகிறது என்பதைக் கவனியுங்கள். *ஒரே* மனுஷனாலே உலகத்திற்கு அழிவு வந்தது; பின்பு *ஒரே* மனுஷன் இவ்வுலகத்தை மீட்க வந்தார். ஒரே ஜீவனின் வல்ல மையை ஒருபோதும், விசேஷமாக அந்த ஒரே ஜீவன் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்படுகையில் அதைக் குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள். நீண்ட காலத்திற்கு முன்பு நான் கேள்விப்பட்ட குறிக்கோள் ஒன்று என் நினைவுக்கு வருகிறது: "நான் ஒரே ஒருவனாக மாத்திரம் இருக்கிறேன், ஆனால் நான் ஒருவனாக இருக்கிறேன். என்னால் எல்லாவற்றையும் செய்யமுடியாது, ஆனால் என்னால் சிலவற்றைச் செய்ய முடியும். என்னால் செய்ய முடிந்ததைத் தேவனு டைய உதவியோடு நான் *செய்வேன்.*"

**பாவம் பயங்கரமானதாக உள்ளது**

பாவம் என்பதன் கருத்து இன்றைய நாட்களில் சமூகத்தின் பல பிரிவுகளில் குறைத்து மதிப்பிடப்படுகிறது/அதாவது பாவம் என்பது அவ்வளவு மோச மானதல்ல என்று கருதப்படுகிறது. பாவம் நிலவுகிறது என்பதையே சிலர் மறுக் கின்றனர், அதே வேளையில் மற்றவர்கள், "பாவம்" என்று வேதாகமம் குறிப்பிடுவது மோசமானதே அல்ல என்று வலியுறுத்துகின்றனர். இதற்கு நேர்மாறாக, நாம் ஆதாமின் பாவத்தையும் அதன் விளைவுகளையும் கண்ணோக்குகையில், பாவம் உண்மையானது, அது பயங்கரமானது மற்றும் அதன் விளைவு அச்சுறுத்தக்கூடியது என்பதை நாம் காண்கிறோம். ஆதாம் பாவம் செய்து உலகத்திற்குள் மரணம் பிரவேசித்தபோது, "நிலப்பகுதியின் குறுக்கில் மிகநீண்ட மற்றும் மிகக்கறுமையான நிழல் படியவைக்கப்பட்டது!"[12]

**கிருபை வியப்புக்குரியதாக உள்ளது**

தேவன் மனிதகுலத்திற்கு உதவிசெய்யக் கடப்பாடு உடையவரல்ல, ஆனால் - ஆச்சரியங்களுக்கெல்லாம் ஆச்சரியமானது! - அவர் நம்மீது அன்புகூர்ந்தார் (யோவான் 3:16) மற்றும் தமது கிருபையை அவர் நம்மீது பொழிந்தார். "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" என்று பவுல் எழுதினார் (ரோமர் 5:20). Pilgrim's Progress ("மோட்சப் பிரயாணம்") என்ற புத்தகத்தை எழுதிய ஜான் பன்யன் (1628-1688) என்பவர், தமது சுயவரலாற்றின் தலைப்பை ரோமர் 5:20ன் அடிப்படையில் அமைத்தார்: Grace Abounding. (பொங்கிப் பெருகும் கிருபை).[13]

**சிலுவை இன்றியமையாததாக உள்ளது**

ஆதாம் செய்திருந்த பாவத்தை நீக்கிப்போடக் கிறிஸ்து வராதிருந்தார் என்றால் - அது எவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கும் என்பதை வார்த்தைகளால் விளக்க இயலாது. உண்மையில், அவர் வந்தார், மற்றும் அவர் உங்களுக்காகவும் எனக்காகவும் ஒரு சிலுவையில் மரித்தார்! இரண்டாம் உலகப்போரின் முடிவின்போது, வின்ஸ்ட்டன் சர்ச்சில், பின்வரும் மறக்க இயலாத வார்த்தைகளுடன் ராயல் விமானப்படையில் பணியாற்றி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்: "இவ்வளவு மிகக் குறைவானவர்களுக்கு இவ்வளவு மிக அதிகமானவர்கள் ஒருக்காலும் கடன்பட்டிருந்தது இல்லை." சிலுவையின்மீது கிறிஸ்துவை நாம் கண்ணோக்குகையில், "ஒரே ஒருவருக்கு இவ்வளவு அதிக மானவர்கள் ஒருக்காலும் கடன்பட்டிருந்ததில்லை!" என்று நாம் அறிக்கையிட்டாக வேண்டும்.[14]

**மரணம் தவிர்க்க இயலாததாக உள்ளது**

"மரணம் எல்லாருக்கும் வந்தது" என்பது ஆதாமின் பாவத்தினுடைய ஒரு விளைவாக இருந்தது (வசனம் 12). "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபிரெயர் 9:27). நம்மில் பலர் மரணத்தைப் பற்றி நினைக்க விரும்புவதில்லை, ஆனால் அது தவிர்க்க இயலாததாக உள்ளது - மற்றும் அதைத் தொடர்ந்து நியாயத்தீர்ப்பு வரும் என்பது நிச்சயமானதாக உள்ளது. ஞானவான் வாழ்வுக்காக மாத்திரமல்ல, ஆனால் மரணத்திற்காகவும் ஆயத்தமாகின்றான்.

### *உயிர்த்தெழுதல் நிச்சயமானதாக உள்ளது*

*ஆதாமின் பாவத்தினுடைய செயல்விளைவுகளை திருப்புவதற்காக/நீக்குவதற்காக கிறிஸ்து வந்தார். ஆதாமின் பாவத்தின் விளைவாக, உடல்ரீதியான மரணம் ஒவ்வொரு நபருக்கும் வந்தது; ஆனால், கிறிஸ்துவின் மூலமாக, நாம் ஒருநாளில் உயிர்ப்பிக்கப்படுவோம். இயேசு மறுபடியும் வரும்போது, "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்[பார்கள்]; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29).*

### *பொறுப்பு [அவரவருக்கு] சொந்தமானதாக உள்ளது*

*நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த முடிவிற்குத் தாமே பொறுப்பாளிகளாக இருக்கிறோம். ஆதாமின் பாவத்தினிமித்தமாக, நாம் உடல்ரீதியாக மரிக்கிறோம்; மற்றும் தேவனுடைய கிருபையினிமித்தமாக, நாம் ஒருநாளிலே உடல்ரீதியாக வாழ்வோம். இருப்பினும், நமது* சொந்தப் *பாவங்களினிமித்தமாகவே நாம் ஆவிக்குரிய முறையில் மரிக்கிறோம், கிறிஸ்துவின் பலியின்மீதுள்ள விசுவாசத்தின்மூலமாக மாத்திரமே நாம் நித்தியத்திற்கும் வாழமுடியும்.[15] நமது மாம்சத்தைப் பொறுத்தமட்டில் நாம் தேர்ந்துகொள்ளுதல் எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் நமது விசுவாசத்தைப் பொறுத்த மட்டில் நாம் தேர்ந்துகொள்ளுதலைக் கொண்டிருக்கிறோம். ஒருமுறை, முதிர் வயதான ஒரு பிரசங்கியாரிடத்தில், இரட்சிப்பு எல்லாருக்குமானது என்றால், ஏன் எல்லாரும் இரட்சிக்கப்படுவதில்லை? என்று கேட்கப்பட்டது. அந்த முதிர் வயதான மனிதர் அதற்கு, "பளிங்குபோலத் தெளிவான தண்ணீரானது பல ஆயிரக்கணக்கான வருடங்களாக பனிமூடிய மலைகளின் உச்சிகளிலிருந்து பாய்ந்தோடி வந்துகொண்டிருந்தபோதிலும், இன்னமும் ஏன் அழுக்கான மக்கள் இருக்கின்றனர்?" என்று பதில்கேள்வி கேட்டார்.[16] சிலர் கழுவிக்கொள்ள மறுக்கின்றனர் என்பதே உண்மையாக உள்ளது. அதுபோன்றே, சிலர் இயேசு என்ற தேவனுடைய கொடையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.*

### *ஒரு (முடிவெடுப்பது) என்பது தப்பிக்க இயலாததாக உள்ளது*

*ஜேம்ஸ் R. எட்வர்ட்ஸ் என்பவர், "தேர்வுசெய்தல் என்பதன் குறுக்குச் சாலையில் நிற்றலென்பதே மனிதராக இருத்தல் என்பதாக உள்ளது" என்று எழுதினார்.[17] நீங்கள் உங்கள் பாவங்களில் நிலைத்து நின்று அந்தப் பாவத்தின் நொறுக்கும் விளைவுகளைப் பட்டு அனுபவிக்கத் தேர்ந்துகொள்ள முடியும், அல்லது நீங்கள் இயேசுவை விசுவாசிக்கவும் அவரை உங்கள் வாழ்வின் அரசராக முடிசூட்டவும் தீர்மானிப்பதைத் தேர்ந்துகொள்ள முடியும். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் என்பது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுதலாகவும் தேவன் உங்களுக்கென்று ஆயத்தம் பண்ணியுள்ள ஆசீர்வாதங்களைப் பெறுதலாகவும் உள்ளது. சிலர், ஒரு முடிவெடுப்பதைத் தாங்கள் மறுக்க முடியும், அல்லது குறைந்தபட்சம் அதைத் தள்ளிப்போட முடியும் என்று நினைக்கின்றனர்; ஆனால் அவர்கள் கிறிஸ்துவுக்கென்று முடிவெடுக்கத் தவறும் ஒவ்வொரு வேளையிலும், அவர்கள் அவருக்கெதிராக முடிவெடுப்பவர்களாக உள்ளனர் (லூக்கா 11:23ஐக் காணவும்). நீண்ட காலத்திற்கு முன்பு, யோசுவா பின்வரும் அறைகூவலை*

*விடுத்தார்: "... யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; ... நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்" (யோசுவா 24:15).*

## முடிவுரை

நாம் இந்தப் பாடத்தை முடிக்கும் வேளையில், நாம் இப்போதுதான் படித்துள்ள இவ்வசனப்பகுதியின் முதன்மைச் சிந்தனைக்குத் திரும்ப விரும்புகிறேன்: மனிதகுலத்திற்குள் ஆதாம் அறிமுகப்படுத்திய எந்தப் பிரச்சனையையும் - மற்றும் அதைவிட அதிகமான பிரச்சனைகளையும் கிறிஸ்து எடுத்துப் போட்டிருக்கிறார். இது ஒரு இறையியல் கூற்றாக மாத்திரம் உள்ளதா? இல்லை, இது நடைமுறைக்கு உகந்த மற்றும் தனிப்பட்ட சத்தியமாக உள்ளது. ரோமர் 5:12-21 வசனப்பகுதியை ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் வரலாறாக மாத்திரம் நினைக்க வேண்டாம்; அது *உங்கள்* வரலாறாகவும் உள்ளது.

பரிசுத்த ஆவியானவர் இவ்வசனப்பகுதியை தீர்க்கப்பட வேண்டிய புதிராக உள்ளடக்கவில்லை, ஆனால் ஏற்புடையவைகளாக்கப்பட வேண்டிய சத்தி யங்களின் எடுத்துரைப்பாக இதை அவர் உள்ளடக்கினார். நீங்கள் ஆதாமின் பாவத்தினால் அன்றாடம் துன்புறுகிறீர்கள் மற்றும் ஒருநாளில் நீங்கள் அந்தப் பாவத்தினிமித்தம் மரணத்தின் ஆட்சிக்கோலை எதிர்கொள்வீர்கள் என்பது ஒரு சத்தியமாக உள்ளது. உங்கள் தனிப்பட்ட பாவத்தினிமித்தம், நீங்கள் இங்கும் மற்றும் நித்தியத்திற்கும் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட முடியும் என்பது இன்னொரு சத்தியமாக உள்ளது. ஆதாமின் மற்றும் உங்களின் பாவங்களுக்கான தண்டனைகளை நீக்கிப் போட இயேசு வந்தார் என்பது அதிகம் மன எழுச்சியூட்டும் சத்தியமாக உள்ளது. அவர் *உங்களுக்காக* மரித்தார், மற்றும் நீங்கள் அவரில் விசுவாசம் கொண்டு அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் ஆவலுடன் விரும்புகிறார் (ரோமர் 6:3-6). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இந்தப் பகுதியானது உங்கள் சிந்தைக்கு வேலை வைத்திருக்கலாம், ஆனால் நீங்கள் இப்போது அது உங்கள் இருதயத்தைத் தொடவும் உங்கள் விருப்பத்தைத் தூண்டவும் அனுமதிக்க வேண்டும்!

## பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் ஒரு குறிப்பு

5:18-21ன் மீதான பாடத்திற்கு, "புதிரான வசனப்பகுதியிலிருந்து தெளிவான சத்தியங்கள்" அல்லது, "கடினமான வசனப்பகுதியிலிருந்து மகிழ்ச்சி பொங்கும் சத்தியங்கள்" என்பது ஒரு மாற்றுத் தலைப்பாக இருக்கலாம். "நேர்மாறும் முடிவுகளும்" என்பது சாத்தியமான இன்னொரு தலைப்பாகும்.

குறிப்புகள்

[1]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 83. [2]இது "ஒரு நீதியான செய்கையினாலே" என்று மொழிபெயர்க்கப்படக் கூடும். [3]"உடல்ரீதியான மரணம் மாத்திரமே" என்ற அணுகுமுறையை மேற் கொள்பவர்கள், "எல்லா மனுஷருக்கும் ஆக்கினைத்தீர்ப்பு வந்தது" என்பதை, ஆதாமின் பாவத்தின் மூலமாக உடல்ரீதியான மரணம் வந்தது என்ற வகையில் விளக்குவார்கள்.

*18ம் வசனத்தில் உள்ள "ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு" என்பது ஒவ்வொருவரையும் மரித்தோரிலிருந்த உயிர்ப்பித்தலினால் அந்தத்தண்டனையை இயேசு திருப்பிப்போடுதலை முதன்மையாகக் குறிப்பிடுவதாக இருக்கும் (யோவான் 5:28, 29).* [4]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 110. [5]J. D. Thomas, Class Notes, *Romans,* Abilene Christian College (1955). [6]*கிரேக்க வசனத்தில், "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்கு முன்பு (ஆங்கிலத்தில் உள்ளதுபோன்று,* "the" *என்ற) திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவும் இல்லை, ஆனால் பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றியே பேசினார் என்பதைச் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பிக்கிறது.* [7]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 241. [8]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 121. [9]*ரோமர் 5:20ல் "பெருகினது"* ("increased") *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (pleonazo என்பதிலிருந்து வருகிற) கிரேக்க வார்த்தை மாறுபட்ட வடிவமாக, ஆனால்* "abounded" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (perisseuō என்ற) வார்த்தையின் வேர்வார்த்தைக்கு சரியானதாக உள்ளது.* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 6.) [10]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 193.

[11]*இங்கு கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைப் பயன்பாடுகளை நீங்கள் விரித்துரைக்க விரும்பலாம்.* [12]Jim Hylton, *Just Dying to Live* (Kalamazoo, Mich.: Master's Press, 1976), 46. [13]James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 154. [14]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 176. [15]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 170. [16]Adapted from James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 210. [17]Edwards, 151.